In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.11/2021 | Prosecution witness P.W.19 |
| Name: Dr.Arunmozhi | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 27-11-2023

**(Accused is present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது திருவரம்பூர், துவாக்குடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது 18.05.2020 ம் தேதி மதியம் 1.30 மணிக்கு பட்டிவீரன்பட்டி காவல் நிலைய தலைமை காவலர் 1633 முத்துக்குமார் என்பவர் நிலைய கு.எண்.332/2020 ச/பி 341, 294(b) 302 இதச வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி (வயது 27) த/பெ ராமர், முத்துலாபுரம் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அந்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.9. அதன் பேரில் மதியம் 1.30 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பித்தேன். அதில் கீழ்க்கண்ட வெளிக்காயங்கள் காணப்பட்டது.

1. இடது மார்பில் 9x4 c.m. நீள அகலத்தில் இருதயம் வரை ஆழமாக வெட்டுக்காயம் இருந்தது. மேற்படி காயத்தில் இரத்தக்கசிவு இருந்தது.

உள்காயங்கள் பின்வருமாறு

இடது இருதய அறையில் பிளவுக்காயம் காணப்பட்டது. 5 வது விலா எலும்பில் முறிவு ஏற்பட்டிருந்தது. மூளை மற்றும் மண்டை ஓடு

சாதாரணமாக இருந்தது. மூளையின் உட்புறமும் சாதாரணமாக இருந்தது. நுரையீரல, மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகங்கள் சாதாரணமாக இருந்தது. வயிற்றுப்பகுதியில் 100 எம்.எல். உணவு திரவம் இருந்தது. இடுப்பு மற்றும் முதுகெலும்பு சாதாரணமாக இருந்தது.

மேற்படி நபர் பிரேத பரிசோதனை செய்வதற்கு முன்பு 12 முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்கலாம் என்றும் அவரது இறப்பானது இருதயத்தில் ஏற்பட்ட பிளவுபட்ட காயத்தினாலும் அதிக இரத்தப்போக்கினாலும் ஏற்பட்டிருக்கக்கூடும் என கருத்து தெரிவித்துள்ளேன். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சாபொ1 ஆயுதத்தைக் கொண்டு தாக்கும்போது மேற்படி பிளவு காயம் ஏற்பட வாய்ப்புண்டு. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.10. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.11.27 17:05:04 +0530

Principal District Judge,
Dindigul.